

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகரம் முன்னாள் துணைச் செயலாளர் என்.துரையரசன் பூவிருந்தவல்லி நகர துணை செயலாளர் துரை பாஸ்கர் இல்ல திறப்பு விழா நகர கழகச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு புதிய இல்லத்தை திறந்து வைத்து வாழ்த்தினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பி.டி.சி.செல்வராஜ், கே.ஜெ.ரமேஷ், பிரபுகஜேந்திரன், சி.ஜெரால்டு, ம.இராஜி, காயத்ரி ஸ்ரீதர், வி.ஜெ.சீனிவாசன், மேயர் உதயகுமார், ப.ச.கமலேஷ், காஞ்சனாசுதாகர், எம்.முத்துதமிழ்செல்வம், வி.குமார், க.ஸ்ரீதர், எச்.தாஜுதீன், ப.அன்பழகன், பி.ஆர்.பி.அப்பர்ஸ்டாலின், டில்லிராணிமலர் மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புண்ணியகோட்டி, பி.சௌந்தரராஜன், ஏ.ராஷிக், க.சாஜகான், ஏ.விமல்ஆனந்த், இ.யுவராஜ், க.சரவணன், எம்.திருமலை உள்பட திமுக நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள் கவுன்சிலர்கள் கலந்து கொண்டார்கள்.

# தமிழ்நாட்டில் குடிநீர் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதி வழங்கப்பட்டதா?

## மக்களவையில் — தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச்.27-

தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் ஜல் சக்தி அமைச்சகத்திடம் தமிழ்நாட்டில் குடிநீர் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மத்திய நிதி குறித்து சில கேள்விகளை முன்வைத்தார்.



அதாவது, ஹோகெனக்கல் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் - கட்டம் III பணிகள் மத்திய அரசின் பங்கான ரூ.2,283 கோடி விடுவிக்கப்படாததால் மெதுவாக நடைபெறுகிறது என்பது உண்மையா? அதன் தற்போதைய நிலை என்ன?

மேலும், அந்தத் திட்டத்திற்கான நிலுவை நிதியை விரைவாக விடுவிக்க மத்திய அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது? வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட தமிழ்நாட்டில் நடைபெறும் குடிநீர் திட்டங்களுக்கு மத்திய அரசு வழங்கிய நிதி விவரங்கள் என்ன? ஆகிய கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் வி. சோமண்ணா எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:

2019 ஆகஸ்ட் மாதம் முதல் மத்திய அரசு 'ஜல் ஜீவன் மிஷன் - ஹர் கர் ஜல்' (JJM) (அனைத்து வீடு களுக்கும் நீர்) என்ற மத்திய நிதி ஆதரவு திட்டத்தை மாநிலங்களுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் நோக்கம், நாட்டின் அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான குழாய் குடிநீர் இணைப்பை வழங்குவது ஆகும்.

இந்த திட்டம் 2019 - 20 முதல் 2023 - 24 வரை ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு செயல்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இந்த காலக்கட்டத்திற்குள் குடிநீர் திட்டங்களுக்கான திட்டமிடல், ஒப்புதல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றை மாநில அரசுகள் நிறைவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழு (SLSSC) கடந்த 2023 ஜூன் மாதத்தில் ஹோகெனக்கல் குடிநீர் திட்டம் - கட்டம் IIக்கு ஒப்புதல் வழங்கியது. ஆனால் இந்த திட்டம் மிஷன் காலக் கட்டத்திற்குள் ஒப்பந்தம் செய்யப்படாததால் நடைமுறைக்கு வரவில்லை என்று பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 - 26 மத்திய பட்ஜெட்டில் ஜல் ஜீவன் திட்டத்தை 2028ஆம் ஆண்டு வரை நீட்டிப்பதாக நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

குடிநீர் என்பது மாநிலங்களின் பொறுப்பில் உள்ள துறையாகும். மாநில அரசுகள் திட்டங்களை திட்டமிட்டு, ஒப்புதல் அளித்து செயல்படுத்துகின்றன. மத்திய அரசு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்குகிறது.

இந்த திட்ட காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புற குடிநீர் திட்டங்களை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு மொத்தம் ரூ.5,899.53 கோடி நிதி வழங்கியுள்ளது.

இதில் வேலூர் மக்களவைத் தொகுதி உட்பட மாநிலம் முழுவதும் கிராமப்புற குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### இரா.லட்சுமணன் தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி சார்பில் பி.எல்.ஏ.2 - பி.டி.ஏ. - பி.ஓய்.ஏ. ஆலோசனைக் கூட்டம்!

## ஆர்.எஸ்.பாரதி — ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகின்றனர்! கலாநிதி வீராசாமி — கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

சென்னை, மார்ச்.27-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி கழக சார்பாக பி.எல்.ஏ.2, பி.டி.ஏ, பி.ஒய்.ஏ, ஆலோசனைக்கூட்டம் இன்று (27.03.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் வாணி மஹால், வள்ளலார் நெடுஞ்சாலையில் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதிச்செயலாளர் இரா.லட்சுமணன் தலைமை வகிக்கிறார்.

ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இரா.மதிவாணன், என்.மருதுகணேஷ், இரா.வெற்றிவீரன், வெ.சு.சத்தியநாராயணன், வி.வி.ரமேஷ், ஒலி பாபு, இர.பொன்இளவரசன், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாக ராஜன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், மற்றும் பாக முகவர்கள், பிஎல்ஏ2, பிடிஏ, பிஒய்ஏ, வட்ட கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கலந்து கொள்கிறார்கள்.

ப.குமார், ச.தமிழ்செல்வன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

### தலைமை - வ.பெ.சுரேஷ்! முன்னிலை - கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. - சுபேர்கான்!

# இராயபுரம் மேற்குப் பகுதி பி.எல்.ஏ-2, பி.டி.ஏ, பி.ஒய்.ஏ. கழக நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, மார்ச் 27

இராயபுரம் மேற்குப் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இராயபுரம் மேற்குப் பகுதி BLA2, BDA, BYA, கழக நிர்வாகிகள் கூட்டம் 28/03/2026 சனிக்கிழமை காலை 10:00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் தலைமை வகிக்கிறார். கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., சுபேர்கான் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மற்றும் BLA2,BDA,BYA நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ் தெரிவித்துள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு – மேற்கு பகுதி திமுக அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர் – மாவட்டத் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் மயிலை தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கோவி.லெனின், பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### சென்னை கிழக்கு மாவட்டம்

# எழும்பூர், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, எழும்பூர் வடக்கு / தெற்கு, துறைமுகம் கிழக்கு/ மேற்கு பகுதி தேர்தல் பணி மனைகள் திறப்பு மற்றும் துறைமுகம் கிழக்கு பகுதியில் பெண்கள் கொண்டாடும் உலக பெண்கள் தினவிழா

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, எழும்பூர் வடக்கு / தெற்கு, துறைமுகம் கிழக்கு/ மேற்கு பகுதி தேர்தல் பணி மனைகள் திறப்பு மற்றும் துறைமுகம் கிழக்கு பகுதியில் கொண்டாடும் உலக பெண்கள் தினவிழா 27.3.2026, வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் விவரங்கள் பின்வருமாறு:-

| நாள் | நிகழ்ச்சி/பகுதி | இடம் |
|---|---|---|
| 27.3.2026 வெள்ளி காலை 9.30 மணி | தேர்தல் பணிமனை திறப்பு எழும்பூர் வடக்கு பகுதி | எண்.218/192, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை– 10. |
| 27.3.2026 வெள்ளி காலை 10.00 மணி | தேர்தல் பணிமனை திறப்பு எழும்பூர் தெற்கு பகுதி | எண்,45 . திருவேங்கடம் தெரு பெரியமேடு, சென்னை – 600003 பத்திரப்பதிவு அலுவலகம் அருகில் |
| 27.3.2026 வெள்ளி மாலை 5.00 மணி | தேர்தல் பணிமனை திறப்பு துறைமுகம் மேற்கு பகுதி | எண்.50, அண்ணா பிள்ளை தெரு, தங்கசாலைதெரு, சந்திப்பு, துறைமுகம் மேற்கு பகுதி |
| 27.3.2026 வெள்ளி மாலை 5.30 மணி | தேர்தல் பணிமனை திறப்பு துறைமுகம் கிழக்கு பகுதி | எண்.49/68, வெங்கட மேஸ்திரி தெரு, மண்ணடி, பிராட்வே துறைமுகம் கிழக்கு பகுதி |
| 27.3.2026 வெள்ளி மாலை 6.00 மணி | துறைமுகம் கிழக்கு பகுதியில் பெண்கள் கொண்டாடும் உலக பெண்கள் தினவிழா | டான்பாஸ்கோ பள்ளி வளாகம், பிரகாச சாலை, பிராட்வே, சென்னை. |

மேற்கண்ட தேர்தல் பணிமனை திறப்பு விழாவில் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளும் உலக பெண்கள் தினவிழாவில் துறைமுகம் தொகுதிக்குட்பட்ட மகளிர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

### கலாநிதி வீராசாமி எம்.பி - ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ — கே.வி.லோகேஷ் பங்கேற்பு!

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் பி.எல்.ஏ.2 - பி.டி.ஏ. - பி.ஒய்.ஏ. ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி — ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்குகின்றனர்! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் அறிவிப்பு!

சென்னை, மார்ச்.27

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி எஸ். ஜெபதாஸ் பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்குப் பகுதிக் கழக பாக முகவர்கள்-2, பாக தகவல் தொழில்நுட்ப முகவர்கள், பாக இளைஞர் அணி முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (27.3.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் கொருக்குப்பேட்டை மரியம் மாளிகையில் நடைபெறுகிறது.

பகுதி அவைத்தலைவர் மாஸ்.டி. வெங்கடேசன் தலைமையில் எம். கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.ஸ்ரீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

நேதாஜி யு.கணேசன் எம்.சி, எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம். சசிகுமார், ஜி. ஏழுமலை, ஆர்.ராஜன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி, எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர் கே.வி. லோகேஷ், ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் ஆர்.கே.நகர் மேற்கு பகுதிக்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள்-2, பாக இளைஞர் அணி நிர்வாகிகள், பாக தகவல் தொழில்நுட்ப அணி, கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவி

# கமலா செல்வம் மகன் எஸ்.ராசா மறைவு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் - டாக்டர் வை. முத்துராஜா அஞ்சலி!

புதுக்கோட்டை,மார்ச் 27-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவியும், பாரம்பரிய கழக குடும்பத்தைச் சேர்ந்த திருமதி கமலா செல்வம் அவர்களின் மகன் எஸ்.ராஜா மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாரின் மறைவு செய்தி அறிந்து மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் எஸ். ரெகுபதி,வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன்,கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து விவசாய தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர் த. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திக் தொண்டமான்., மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் செ.அசோக் பாண்டியன், மாநிலத் தொண்டர் அணி துணைச் செயலாளர் சுப. சரவணன், கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கீழாத்தூர் ரெ.தங்கம்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சாத்தையா, சிஆர்வி.சித்ரா, மூத்த வழக்கறிஞர் எஸ்.திருஞானசம்பந்தம், மாநகரச் செயலாளர்கள் லியாத்அலி, வே.ராஜேஷ், மாவட்ட துணை செயலாளர்கள் பெ.ராஜேஸ்வரி, ஒன்றிய செயலாளர் தவ. பாஞ்சாலன், முன்னாள் பிஆர்ஓ ரெ.மதியழகன், ராஜா பர்னிச்சர் ராஜசேகர், கழக நிர்வாகிகளான ராம. செல்வராஜ் , நகர் மன்ற உறுப்பினர்கள் கவி வேந்தன், பால்ராஜ், சி.மதியழகன், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கணேஷ் செந்தில், வட்ட கழக செயலாளர்கள் காசி. இளங்கோவன், செபஸ்தியான், எம். ரெங்கப்பன், மற்றும் மாவட்டக் கழக நகரக் கழக ஒன்றிய கழக நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியதுடன், அவரது தாயாரும் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவி கமலா செல்வம் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள். மறைந்த எஸ்.ராஜா அவர்களுக்கு ஒரு மகள் ஆர். ஆதிலட்சுமி (வயது 10) உள்ளார்.

---




தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்களை சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நேற்று (26.03.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், (இணை ஆணையாளர் (கல்வி)), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டார துணை ஆணையாளர்), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்), கல்வி அலுவலர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.